# தமிழ் நாட்டுப்புற நடனம் மற்றும் கலைகள் பகுப்பாய்வு

# Analysis of Tamil Folk Dance and Arts

**மு. சித்ரப்ரியா**
ஆய்வு மாணவி (பகுதிநேரம்), தமிழ்த்துறை
ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி), ஈரோடு, இந்தியா

**முனைவர் கு. நாகராஜன்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி), ஈரோடு, இந்தியா

**M. Chitrapriya**
*Research Scholar (Part Time), Department of Tamil*
*Erode Arts and Science College (A),*
*Erode, India*

**Dr. G. Nagarajan**
*Assistant Professor, Department of Tamil*
*Erode Arts and Science College (Autonomous),*
*Erode, India*

## ஆய்வுச் சுருக்கம்

*பழந்தமிழ் மக்கள் தனது இன்பத்திற்காகவும் இசைகளின் தன்மையை வளர்ப்பதற்காகவும் பல கலைகளை கற்று மக்களிடையே மகிழ்ச்சி தன்மையைமேம்படுத்தி வந்தனர். அதில் இசையும் நடனமும் குறிப்பிடத்தக்கது. பழங்கால மக்கள் சமூகத்தில் பொழுதுபோக்கிற்காக தெருக்கூத்துகளின் நடனங்கள் ஆடியும் இசைகளை இசைத்தும் வளர்ப்பதில் அதிக ஆர்வம் கொண்டுள்ளனர்.*

## Abstract

*The people of Ancient Tamils learned many arts for their enjoyment and to develop the character of music and to improve the character of happiness among the people. They are interested in spending time for music and dance.*

**Citation**

Chitrapriya, M., and G. Nagarajan. “Analysis of Tamil Folk Dance and Arts.” *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 1, 2024, pp. 14–17.

**ஆய்வுக் கருதுகோள்**

*பழந்தமிழ் மக்கள் நாட்டுப்புறங்களில் தனது மகிழ்ச்சிக்கான நடனங்கள் ஆடி தனது திறமைகளை ஊக்குவிக்கும் மற்ற சமுதாயம் சார்ந்த மக்களை மகிழ்ச்சியான நிலையில் இருக்க தெருக்கூத்துகள் நடத்தி வந்தனர். அது இன்றளவில் மேடை கச்சேரி நிகழ்வுகளாக இடம் பெற்றுள்ளன என இவ்வாய்வின் கருதுகோளாக கொள்ளலாம்.*

**ஆய்வு அணுகுமுறைகள்**

- *சமூக பண்பாட்டாய்வு*
- *ஒப்பீட்டு முறை ஆய்வு*

**ஆய்வுப் பின்புலம்**

*படிநிலைக் கூறுகள் அன்றைய காலங்களின் தொடர்ச்சியாக காணப்படுகிறது.*

**ஆய்வுப் பகுப்பு**

1. *முன்னுரை*
2. *நாட்டுப்புற நடனங்கள்*
3. *நாட்டுப்புற இசைகள்*
4. *மகிழ்ச்சி அன்றைய நிலை இன்றைய நிலை*
5. *முடிவுரை*

*என்று ஐந்து இயல்பாக தொகுக்கப்பட்டுள்ளது.*

**நாட்டுப்புற நடனங்கள்**

*கிராம மக்களின் உணர்ச்சியை தூண்டி இன்பம் தரும் நிகழ்வாக கருதப்படுவது கிராம மக்களின் நடனம் ஆகும் இது போன்ற கலைகள் மக்களின் மனதிற்கு புத்துணர்ச்சி அளிக்கக்கூடியது. மனநிறைவை அளிக்கக்கூடியவையா--ம் எல்லா உயிர்களையும் தன்வயப்படுத்தும் திறமையாற்றல் பெற்று விளங்குவது கலைகள் ஆகும். இதில் நடனங்களும் அடங்கும்.*

**நாட்டுப்புற நடனங்களின் வளர்ச்சி**

**காவடி ஆட்டம்**

*பண்டைய காலங்கள் தொட்டு மக்கள் காவடி ஆட்ட நிகழ்வில் மக்கள் முருகன் மீது பக்தி கொண்டு காவடிகளை தூக்கிக் கொண்டும் கடவுளின் உதவியை நாடுவதற்காக பக்தர்கள் உடலை வருத்திக்கொண்டு காவடி ஆட்டம் ஆன்மிக கடனை சமநிலைப்படுத்துவதற்காக இன்றும் முருகன் கோவிலுக்கு பக்தர்கள் நடனம் ஆடிக்கொண்டு மலை ஏறுகின்றனர்.*

**புலியாட்டம்**

*ஆண்கள் அங்காளம்மன் கோவில் திருவிழாவில் இப்போது புலி வேடம் அணிந்து சேர்களை பூசிக்கொண்டு அல்லது புலி தோல்களை பூர்த்திக் கொண்டும் புலியின் மாதிரி ஆடு மாற்றம் இன்றளவும் கோயில் விழாக்களிலும் நடைபெற்ற வருகிறது.*

**கம்பம் ஆடுதல்**

*கிராமப்புறங்களில் மக்கள் மாரியம்மன் கோவிலுக்கு கம்பம் வைத்து மத்தளங்களை இசைக்கும் அந்த இசைக்கேற்ப ஆண்கள் ஆடும் வழக்கமும் இன்றளவும் காணப்படுகின்றன. கம்பம் ஆடும் நிகழ்வு மாசி முதல் வைகாசி மாதம் வரை நடைபெறும்.*

**மரபு**

*பழங்காலம் தொட்டு இன்றளவும் மத்தளங்களை சத்ததிற்கு கேட்ப ஆண்கள் கம்பம் மாடும் நிகழ்வு ஒரு மரபு ரீதியாக பின்பற்றப்பட்ட வருகிறது.*

**கோலாட்டம்**

*நாட்டுப்புறங்களில் பெண்கள் இன்றும் பொங்கல் திருவிழாவின் போது மூன்றாம் நாள் காணும் பொங்கல் அன்று இரண்டு சிறிய வண்ணம் பூசப்பட்ட குச்சிகளை வைத்துக்கொண்டு நடனங்கள் பெண்கள் ஆடுகின்றனர். இவ்வாறு நடன நிகழ்வுகள் நடைபெற்ற பெண்களின் நடன தன்மையை சுட்டிக் காட்டுகிறது.*

*இன்றளவும் கோலாட்டம் ஆடும் வழக்கம் கிராமப்புறங்களில் செயல்பட்டு எச்ச கூறுகளாக பெண்களின் மத்தியில் எழுச்சி பெற்று விளங்குகின்றன.*

**கும்மியாட்டம்**

*கும்மியாட்டம் பெண்களிடையே பொங்கல் விழாவின்போது இரண்டு கைகளைத் தட்டி இசைகளை எழுப்பி வட்டமாக நின்று கொண்டு ஆடும் வழக்கம் ஆகும். இதை அனைத்து பெண்களும் தனது பொழுது போக்கிற்காக கும்மிகளை அடித்து மக்களின் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றனர். இதுவும் பழங்கால மரபும் என்ற அமைப்பில் தொடங்கி இன்று வரை காணப்பட்டு வருகின்றன.*

**நாட்டுப்புற இசைகள்**

**பறையாட்டம்**

*பறை என்பது கிராமப்புற மக்களின் இசைகருவிகள் ஆகும். பறையிசைத்துக் கொண்டும் ஆடும் ஆட்டம் பறையாட்டம் எனப்படும் ஒரு பறை தோழி செங்குத்தாக வைத்துக் கொண்டு துணி பட்டையால் தொங்கவிடப்பட்டு மற்றொரு கைக்கும் கலைஞரின் உடலுக்கும் இடையில் பிடித்து இரண்டு குச்சிகளை வைத்துக்கொண்டு ஆடப்படும் ஆட்டமாகும் இந்நிகழ்வு துன்பம் மற்றும் இன்பங்களிலும் இவ்வகை ஆட்டங்கள் ஆடப்படுகின்றன இன்று கல்லூரிகளிலும் பெருமளவில் இவ்வகையான ஆட்டங்களை ஆட மாணவர்களே வந்து பறையடித்துக் கொண்டும் தனது கலைத்திறனையும் நடனத் திறனையும் வெளிப்படுத்துகின்றனர் பழங்கால முதல் இன்று வரை பறையடித்தல் என்பது ஒரு படிமலர்ச்சி கூறுகளாகவே காணப்பட்டது.*

**செண்டை மேளம்**

*செண்டை மேளம் திருமணச் சடங்குகளில் மத்தளங்களைக் கட்டிக்கொண்டு குச்சியினால் தட்டிக் கொண்டும் தனது நடனங்களை ஆண்கள் மற்றும் பெண்கள் ஆடி வருவார் இது கேரளாவில் சிங்காரி மேளம் என்று அழைக்கப்படுகிறது இப்போது இன்றளவும் இவ்வகை நடனங்கள் எல்லா இடங்களிலும் ஆடப்பட்டு வருகிறது.*

**முடிவுரை**

*பழந்தமிழரின் நாட்டுப்புற கலைகள் அன்றும் இன்றும் ஆடல் மற்றும் இசை போன்ற கலைகள் மக்கள் மனதில் இடம்பெற்ற வளர்ச்சிலையை அடைந்துள்ளது இவை நாட்டுப்புற புயலின் எச்சக்கூறுகளாக கலைகளின் தன்மையை எதிர்காலத்தில் மேம்படுத்தும் நிலை இவ்வகை கலைகளுக்கு உண்டு அதன் தன்மையை அது அந்த அந்தக் காலத்திற்கு ஏற்றவாறு மாறி இன்றளவும் எச்சக் கூறுகளாக இருந்து வருகிறது.*

**அடிக்குறிப்புகள்**

1. *தமிழர் மானிடவியல் (பக்த வத்சல பாரதி).*
2. *நாட்டுப்புறவியல் நூல்கள்.*

## References

1. Tamil Anthropology (Bhaktavatsala Bharati).
2. Folklore texts